# பெரியாழ்வார் பாசுரங்களில் தலச்சிறப்புகள்

**முனைவர் மெ.சிவசங்கரி**
**தமிழ்த்துறை, உதவிப்பேராசிரியர்,**
**இதயா மகளிர் கல்லூரி, கும்பகோணம்.**
**யுயனாசைழளந2321;பஅயடை.உழஅ**

40

**ஆய்வுச் சுருக்கம்**

தமிழ் இலக்கிய வரலாற்றில் முதன்மையிடம் பெற்றும் சிறப்புப் பெற்றும் இன்றும் போற்றுதலுக்குரிய ஒன்றாகத் திகழ்வது பக்தி இலக்கியமாகும். பக்தி இலக்கிய வகைகளுள் ஒன்றாகிய வைணவ இலக்கியம் 4000 பாசுரங்களைக் கொண்ட பேரிலக்கியமாகத் திகழ்கிறது. அந்த வகையில் பெரியாழ்வாரின் திருப்பாசுரங்களில் அமைந்துள்ள தலச்சிறப்புகள் குறித்த கட்டுரையாக அமைகிறது.

**முன்னுரை**

நல்லதோர் இலக்கைக் கொண்டதே இலக்கியம். அந்த இலக்கின் தரத்திற்கேற்ப இலக்கியத்தின் தரமும் அமைகிறது. இறைவனே அந்த இலக்காக இருந்தால் இறை உணர்வைப் பாடு பொருளாகக் கொண்ட அந்த இலக்கியம் அமரத்தன்மை பெற்றுத் திகழ்கின்றது. தமிழ் இலக்கியத்திற்கும் இது பொருந்தும். தமிழில் பக்தி இலக்கியம் மிகவும் விசாலமானது கம்பீரமானது. புக்தி இலக்கியங்களைத் தலிர்த்தால் தமிழ் மொழியின் பெருமை கணிசமான அளவில் சேதமடையும். அதன் இனிமை தேய்வுறும்.

**பக்தி இலக்கியம்**

தெய்வங்களை வழி படுவதற்குப் பக்தி இயக்கங்கள் தோன்றியது. ஆதன் விளைவாகப் பக்தி இலக்கியங்கள் தோன்றின. பக்தி இலக்கியங்கள் தமிழ் இலக்கியங்களை வளப்படுத்தின. தமிழ் இலக்கிய வரலாற்றில் பல பெரிய மாற்றங்களை ஏற்படுத்தின. பல்;வேறு வகையபன சமயங்களாகிய சைவம், வைணவம், கிறிஸ்தவம்,அசுலாம், சமணம்,பௌத்தம் முதலான பலவகை இருந்தாலும் சைவம் வைணவம் இரண்டு மட்டுமெ முக்கியத்துவம் பெற்றுத் திகழ்கிறது.

பக்தி இலக்கியக் காலம்

சமயம் என்பது மக்களை வழி நடத்திச் செல்ல வேண்டும். சமயம் வளர்வதற்கு மக்களின் பங்கு இன்றியமையாத ஒன்று. சமயக் கொள்கைகள் மக்களைப் பண்படுத்தும் நோக்கில் அமைவது. நுல்ல வண்ணம் வாழும் வகையை வகுத்துத் தெருவது. சமயமாகும். சமயக் கோட்பாடுகளை சித்தாந்தம் என்றும் மத போதனை என’றும் த்துவம் என்றும் கூறுவர்.

தமிழில் பக்தி இலக்கியத்தை முறைப்படி வளர்;த்தவர்கள் ஆழ்வார்களும் நாயன்மார்களும் ஆவார். தமிழ் பக்திக் கவிஞர்களில் வைணவம் வளர்த்தவர்களில் முதன்மையிடம் பெறுபவர்கள் ஆழ்வார்கள். என்றென்றும் மாறாத குறையாத பொலிவுடையவை இவர்களது பாசுரங்கள் ஆகும்.

பன்னிரு ஆழ்வார்கள் அனைவரும் தங்களது பாசுரங்களில் வைணவத் திருத்தலங்கள் பற்றிப் பாடியுள்ளனர். ஆவ்வகையில் பெரிழயாழ்வாரின் பாசுரங்களில் தலச்சிறப்புகள் குறித்து இக்கட்டுரையில் காணலாம்.

**திருவரங்கம்**

108 திவ்விய தேசங்களில் திருவரங்கம் முதல் திவ்விய தேசமாகும். தற்போது திருவரங்கம் என்று அழைக்கப்படுகிறது. மூலவர் ஸ்ரீரங்கநாதன், பெரியபெருமாள். ஆழகிய மணவாளன் இங்கு சயன கோலத்தில் காட்சியளிக்கிறார். தமிழ்நாட்டில் சோழ நாட்டுத் திரு;பதிகளிவ் திருச்சியை அடிப்படை இடமாகnஅமையப்பெற்று உள்ளுத. உற்சவர் நம்பெருமாள். தூயார் ஸ்ரீரங்கநாகி. டீபரியாழ்வார் இத்தலத்தில் 35 பாசுரங்கள் பாடியுள்ளார்.

‘கருவுடை மேகங்கள் கண்டால் உன்னைக் கண்டால் ஒக்கும் கண்கள்
உருவுடையாய்! உலகேழும் உண்டாக வந்து பிறந்தாய்!
திருவுடையாள் மணவாளா! திருவரங்கத்தே கிடந்தாய்!
மருவி மணம் கமழ்கின்ற மல்லிகைப் பூச்சூட்ட வாராய்” 1

நீருண்ட மேகங்களைப் போல் குளிர்க்த பார்வையை உடையவனே. ஏழுலகங்களும் நலம் பெறும்படி வந்து அவதரித்தவனே. திருமகளின்மெணவாளா. ஸ்ரீரங்கத்தில் பளள்p கொண்டவனே. வாசனைவீசும் மல்லிகைப்பூலைச் சூட்டிக் கொள்ள வா என்று பெரியாழ்வார் அழைக்கிறார்.

‘ஆற்றிலிருந்து விளையாடு மேகங்களைச்
சேற்றால் எறிந்து வளை துகில் கைக்கொண்டு
கரற்றில் கடியனாய் ஓடி அகம்புக்கு
மாற்றமும் தாரானால் இன்று முற்றம்
வளைத்திறம் பேசானால் இன்று முற்றும்” 2

யசோதா நாங்கள் நதியில் விளையாடிக் கொன்டிருந்தோம். கண்ணன் அங்கு வந்து எங்கள் மேல் சேற்றை அள்ளி வீசி விட்டு நாங்கள் கரை மேல் வைத்திருந்த எங்கள் ஆடைகளையும் வளையல்களையும் அள்ளி எடுத்துக் கொண்டு காற்றை விட வேகமாக ஓடி விட்;டான். வளையலைத் தருவேன் அல்லது தர மாட்டேன் என்று ஏதாவது ஒரு பதில் சொல்லாது போல் இன்று நாங்கள் அழிந்து விடுவோம். வீட்டிலே தட்டி நொறுக்கி விடுவார்கள். அதனால் அழிவோம் என்று ஆயர் மங்கைகள் புலம்புவது போல் விளக்குகிறார்.

**திருவெள்ளரை**

திருவெளள்ரை திவவ்pய தேசம் நான்டகாவது திவ்வியதேசமாகும். மூலவர் தாமரைமணாளன். கோலம் நின்ற கோலம்.உற்சவர்-செந்தாமரைக்கண்ணன்.தாயார் செண்பகவள்ளி, பங்கஜவள்ளி. இங்கு பெரியாழ்வார் பெரியாழ்வார் பாடிய பாசுரங்கள் 11 ஆகும்.

‘மன்னு குறுங்குடியாய்! வேள்ளரையாய்! முதில்சூழ்
சோலை மலைக்கரசே! கண்ணபுரத்தமுதே!

ஏன் அவலம் களைவாய் ஆடுக செங்கீரை

ஏழுலகும் உடையாய்! ஆடுக செங்கீரை! 3

உயரமான மதில்கள் சூழ்ந்துள்ள சோலைகள் நிறைந்துள்ள திருவெள்ளரையின் தலைவனே! திருக்கண்ணபுரத்தின் அமுதமே! ஏழுலகிற்கும் உரிமையுடையவனே. என் அவலத்தைப் போக்கச் செங்கீரை ஆடுக என்று பெரியாழ்வார் அழைக்கிறார்.

'பொதுமர் செல்வக் கொழுந்து புணர்ந்திரு வெள்ளதையானை

முhதர்க்கு உயர்ந்த அசோதை மகன் தன்னைச் சாப்பிட்ட மாற்றம்

வேதப் பயன்கொள்ள வல்ல விட்டுச்சித்தன் சொன்ன மாலை

புhதப் பயன்கொள்ள வல்ல பத்தருள்ளார் வினையோமே;' 4

பெண்களுள் பெருமை கொண்ட யசோதை கண்ணனைச் சாப்பிட அழைத்த சொற்களைப் போல் திருமகள் வீற்றிருக்கும் திருமார்புடைய திருவெள்ளரையில் வீற்றிருக்கும் திருமாளைப் பற்றி வேதத்தின் பயன் அறியவல்ல விஷ்ணு சித்தர் என்கிற பெரியாழ்வார் அருளிச் செய்த இப்பாமாலையில் இருந்து ஒரு பாசுரத்தைப் படித்தாலும் அவர்களது தீவினைகள் எல்லாம் தீர்ந்து விடும் என்பது நம்பிக்கை.

திருப்பேர் நகர்

108 திவ்விய தேசங்களில் திருப்பேர் நகர் 6 ஆவது திவ்விய தேசமாகும். தற்போது இவ்வூர் கோவிலடி என அழைக்கப்படுகிறது.

கோலம்-சயன கோலம், உற்சவர்-ரங்கநாதன்

தூயார்-இந்திரா தேவி,கமலவல்லி,தீர்த்தம்-இந்திர தீர்த்தம்

பேரியாழ்வார்nஇதத்லம் பற்றி 2 பாசுரங்களைப் பாடியுள்ளார்.

'தொங்கும் குடந்தையும் கோட்டியூரும் பெரும்

ஏங்கும் தீர்ந்து விளையாடும் என் மகன்

சங்கம் பழமைக்கும் தடக்கைக்குத் தக்க நல்

அங்கம் உடையதோர் கோல் கொண்டு வா

அரக்கு வழித்தோர் கோல் கொண்டு வா' 5

கொங்கு நாட்டிலும், கும்பகோணத்திலும்,திருப்போடியூரிலும் கோவிலடியியலும் மற்றுமுள்ள திருப்பதிகளிலும் திரிந்து விளையாடும் என் செல்வனின் சங்கைப்பிடிக்கும் பெரிய கை;ககுத் தகுந்ததான சொரசொரப்பில்லாத நல்ல அரக்குப் பூசிய ஒரு கோலைக் கொண்டு வருவாயாக எனப் பாடுகிறார்.

'கொண்டல் கண்ணா இங்கு போதராயே, கோயிற்பிள்ளாய்! இங்கே தொண்டிரை மதில்கள் சூழ்ந்திருக்கும் திருமார்பை உடையவனே! ஊண்டு வந்தேன் அம்ம என்று சொல்லி ஓடி அகம்புக ஆய்ச்சி தானும் கண்டு எதிரே சென்றெழுந்துக் கொள்ளக் கண்ணபிரா ன் கள்ள நாடகமாடினான்.

மேகம் போன்ற நிறத்தவனே இங்கே வா, அலையுடைய நீரால் சூழப்பட்டம திருப்பேரிலும்,

ஸ்ரீரங்கத்திலும் பள்ளி கொண்மட ஸ்ரீமத் நாராயணா உன்னை அன்று யசோதை அழைக்க இப்போது தான் சாப்பிட்டேன் என்று கூறிய கண்ணன் வீட்டிற்குள் ஓடிச்சென்ற மகனை தண்டிக்க எண்ணிய தாய் அவனைத் தூக்கி கெஞ்சும் படி கண்ணன் செய்த குறற்ம் என்ன என்று ஆழ்வார் அதிசயிக்கிறார்.

கும்பகோணம் (திருக்குடந்தை)

கும்பகோணம் என்றழைக்கப்படும் திருக்குடந்தை 12 ஆவது திவ்விய தேசமாகும். மூலவர்- சாரங்கபாணி. கோலம்-சயன கோலம். உற்சவர் ஆராவமுதன். தூயார்-கோமளவல்லி. தீர்த்தம்- ஹேமுபுஷ்கரணி.

பெரியாழ்வார் இத்தலத்தில் மூன்று பாசுரங்களைப் பாடியுள்ளார்.

‘கொங்கும் குடந்தையும் கொட்டியூரும் பேரும்
ஏங்கும் திரிந்து விளையாடும் என்  மகன்
சங்கம் பிடிக்கும் தடக்கை;ககுத் தக்கநல்
அங்கம் உடையதோர் கோல் கொண்டுவா
அரக்கு வழித்தோர் கோரல் கொண்டுவா’ 6

ஏன்று கொங்கு நாட்டிலும், கும்பகோணத்திலும், திருக்கோட்டியூரிலும் மற்றுமுள்ள திருப்பதிகளிலும் திரிந்து விளையாடும் என் செல்வனின் சங்கைப் படிக்கும் பெரிய கைக்குத் தகுந்ததான சொரசொரப்பில்லாத நல்ல அரக்குப் பூசிய ஒரு கோலைக் கொண்டு வருவாயாக எனப் பாடுகிறார்.

“ஆலத்திலையான் அரவின் அணைமேலான்
நிPலக்கடலுள் நெடுங்காலம் கண் வளர்ந்தான்
பாலப் பிராயத்தே பார்தத்ர்க்கு அருள் செய்த
கோலப்பிரானுக்கு ஓர் கோல் கொண்டு வா
குடங்தைக் கிடந்தாற்கோர் கோல் கொண்டு வா’ 7

பிரளய காலத்தில் உலகை வயிற்றில் அடக்கி ஆலிலை மேல் பள்ளி கொண்டவன் இவன், ஆதிகேஷன் மேலும் படுத்து இருக்கிறார். சமுத்திரத்திலும் யோக நித்திரை செய்கிறான். இளம் வயதிலேயே அர்ஜுனன் மேல் அன்பு கொண்டு அருள் செய்தான். திருக்கடந்தையில் பள்ளி கொண்ட இந்த அழகனுக்கு ஒரு கோல் கொண்டு வருவாயாக என வருணிக்கிறார் பெரியாழ்வார்.

**துவாரகை**

துவாரகை 104 ஆவது திவ்விய தேசமாகும். தற்போது துவாரகா என்று அழைக்கப்படுகிறது. மூலவர்-கல்யாண நாராயணன், துவாரகாதீசன், துவாரகாநாத்ஜீ. கோலம்-நின்ற கோலம்.தாயார்- கல்யாண hநச்சியார்,தீர்த்தம்-கோமதி தீர்த்தம், கோமதி ஆறு, சமுத்திர நங்கமம். இத்தலத்தில் பெரியாழ்வார் 5 பாசுரங்களைப் பாடியுள்ளார்.

பொல்லா வடிவுடையப் பேய்ச்சி துஞ்சப் புணர்முலை வாய்மருக்க
வல்லானை மாமணிவண்ணனை மருவுமிடம் நாடுதிரெல்
பல்லாயிரம் பெருந்தேவி மாரொடு பௌவம் எறிதுவரை

எல்லாரும் சூழ்ச்சிங்காசனத்தே இருந்தானைக் கண்டரிவார்' 8

கொடிய உருவம் கொண்ட பூதனையின் ஸ்தனத்தில் வாய் வைத்துப் பாலோடு அவள் உயிரையும் உண்டவனை, நீல ரத்தினம் போன்ற திருமேனியை உடையவனைத் தேடுகின்றீர்களே! ஆவன் பல்லாயிரம் தேவியர்களோடு துவாரகையில் அனைவரும் தன்னைச் சூழ்ந்திருக்கும் சிம்மாசனத்தில் அமர்ந்திருக்கும்போது பார்த்தவர் பலருண்டு.

**வடமதுரை**

வடமதுரை 102 ஆவது திவ்விய தேசமாகும். தற்போது இது மதுரா என்று அழைக்கப்படுகிறது. மூலவர்-கோவர்த்த நேசன். பாலகிருஷ்ணன். கோலம்-நின்ற கோலம். தாயார்- சத்திய பாமா நாச்சியார். தீர்;த்தம்-இந்திர தீர்த்தம், -யமுனை ஆறு. பெரியாழ்வார் 16 பாசுரங்களைப் பாடியுள்ளார்.

"உறியை முற்றத் துரட்டிநின் நாடுவார்
நறுநெய் பாலதயிர் நன்றாகத் தூவுவார்
செறிடிமன் சுந்தல் அவிழத் திணைத்து எற்கும்
அறிவழிந்தனர் ஆய்ப்பாடி ஆயரே" 9

இன்னும் மகிழ்ச்சி நிதானப்படாத ஆயர்கள் நெய்யும், பாலும், தயிரும் உள்ள உறியை அளந்துக் கொண்டு வந்து முற்றத்தில் உருட்டிவிட்டுக் கொண்டு கும்மாளமிட்டனர். சுpலர் நெய். தயிர், பால் இவற்றைக் கண்ணனுக்குத் தானம் செய்தனர். ஆனந்தம் மிகுந்து அறிவு மங்கியதால் குடமி அவிழ்ந்தது கூடத் தெரியாமல் குதித்துக் கும்மாளமிட்டனர்.

**முடிவுரை**

திருவரங்கம்,திருவெள்ளரை,திருப்பேர்நகர்,கும்பகோணம், திருக்கணண்புரம்,திருமாலிருஞ்சோலை,திருக்கோஷ்டியூர்,ஸ்ரீவில்லிபுத்தூர், திருக்குறுங்குடி,திருவேங்கடம்,திருவயோத்தி,சாளக்கிராமம்,திருவதரி,கண்டமென்னுங்கடிநகர், துவாரகை,வடமதுரை,திருவாப்பாடி,திருப்பாற்கடல்,பரமபதம் முதலான தலங்களைப் பறற்pப் பெரியாழ்வார் பாடியுள்ளார்.

பெரியாழ்வார் பாசுரங்களில் தலச்சிறப்புகள் தான் முதன்மையிடம் பெற்றுத் திகழ்கிறது மொத்தமாகப் பத்தொன்பது திருத்தலங்களைப் பற்றிப் பாடியுள்ளார்.அனைத்துத்தலங்களிலும் திருமாலின் அருளையும் அழகையும் தோற்றச் சிறப்புகளையும் பாடியுள்ளார்.

**அடிக்குறிப்புகள்**

1.பெரியாழ்வார் திருமொழி, பாசுரம்-- 183
2. பெரியாழ்வார் திருமொழி, பாசுரம்--184
3. பெரியாழ்வார் திருமொழி, பாசுரம்--155
4. பெரியாழ்வார் திருமொழி, பாசுரம்--201
5. பெரியாழ்வார் திருமொழி, பாசுரம்-- 173
6. பெரியாழ்வார் திருமொழி, பாசுரம்-- 333

7.பெரியாழ்வார் திருமொழி, பாசுரம்--73

8..பெரியாழ்வார் திருமொழி, பாசுரம்--193

9.பெரியாழ்வார் திருமொழி, பாசுரம்--16

**பார்வை நூல்கள்**

1.தமிழ் இலக்கிய வரலாறு—முனைவர் சு.ஆனந்தன்

2.நாலாயிர திவ்வியப் பிரபந்தம்--கங்கை புத்தக நிலையம்

3.சோழ நாட்டுத் திருப்பதிகள்--பேரா. .ந சுப்பு ரெட்டியார்

4.தமிழ் இலக்கிய வரலாறு—முனைவர் சுபாஷ் சந்திர போஸ்

5.தமிழக வரலாறும் பண்பாடும்--முனைவர் அறிவுராஜ்